# 10 ஆயிரம் பேர் பதிவிறக்கம் செய்த சென்னை மெட்ரோ ரயில் செயலி !

சென்னை, டிச.8: சென்னை மெட்ரோ ரயில் குறித்த தகவல்களை முழுமையாக பொது மக்களுக்குத் தரும் செயலியை 10 ஆயிரம் பேர் பதிவிறக்கம் செய்துள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் செயலியை ஆண்ட்ராய்டு இயங்குதளம் கொண்ட செல்லிடப்பேசிகளில் உள்ள கூகுள் பிளே ஸ்டோரில், இங்க என பெயரிட்டு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த சென்னை மெட்ரோ ரயில் செயலியைத் திறந்ததுமே ரயில் நிலையம் குறித்த தகவல்கள், பயணக் கட்டண விவரங்கள், அருகில் உள்ள ரயில் நிலைய விவரங்கள் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் உள்ளன.

இவை தவிர மேலும் நான்கு 4 விருப்பங்களையும், உங்கள் பிரதான பக்கத்தில் வைப்பதற்கான வசதியையும் இந்த செயலி தருகிறது. இதன் மூலம் செயலியில் உள்ள பிரதான பக்கத்தை பயணிகள் பயனுள்ள வகையில் மாற்றிக் கொள்ளலாம். இத்துடன் சென்னை வானிலை நிலவரங்களையும் இந்தச் செயலி காட்டுகிறது. மிக முக்கியமாக மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இடையிலான கட்டண விவரங்களை எளிதாகத் தெரிந்துகொள்ள முடியும்.

உதாரணத்துக்கு, கோயம்பேடு முதல் ஷெனாய் நகர் வரை பயணம் செய்ய வேண்டும் என பதிவிட்டால், கட்டணம் நபருக்கு ரூ.30 என சுட்டிக் காட்டும். எனவே, முதல் முறை மெட்ரோ ரயிலை பயன்படுத்தும் பயணிகளுக்கு இந்தச் செயலி மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

கூடுதல் விவரங்கள்: சென்னை மெட்ரோ ரயில் செயலியில் கூடுதலாக பயண விவரங்கள், பயணத்துக்கான ஸ்மார்ட் அட்டை ரீசார்ஜ் பற்றிய தகவல்களுக்கான சுட்டி, சுற்றுலா பயணிகளுக்கான கூடுதல் தகவல்கள் போன்ற வசதிகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பல விஷயங்களை இணையம் இல்லாமலே பயனீட்டாளர்கள் பயன்படுத்த முடியும்.

இத்துடன் மெட்ரோ ரயில் சேவை கிடைக்கும் அத்தனை ரயில் நிலைய விவரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு ரயில் நிலையம் பற்றியும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. எந்தெந்த மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகனங்களை




சென்னை மெட்ரோ ரயில் செயலி

நிறுத்தும் வசதி இருக்கிறது, ரயில் நிலையங்களில் வெளியேறும் வழி தொடர்பான விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும் ரயில் நிலையங்கள் அருகில் இருக்கும் உணவகங்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றையும் இந்தச் செயலி காட்டுகிறது. உணவகங்களின் விவரங்களைக் காட்டுவதற்கும், நமக்கு அருகில் இருக்கும் ரயில் நிலைய விவரங்களைக் காட்டுவதற்கும் கூகுளின் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

டூர் கைடு என்னும் ஆப்ஷனில் சென்னையில் இருக்கும் சுற்றுலாத் தளங்களின் விவரங்கள், கலாசார மையங்கள், உள்ளூர் வானிலை விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

இது குறித்து அசோக் (ஐ.டி. ஊழியர்), முதன்முறையாக மெட்ரோ ரயிலில் பயணம் மேற்கொள்ளும் என்னைப் போன்றவர்களுக்கு சென்னை மெட்ரோ ரயில் செயலி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. ஆங்கிலத்தில் மட்டுமே இப்போது தகவல்கள் இருக்கின்றன. தமிழையும் இதில் இணைக்கலாம். கட்டண விவரங்களைப் பொறுத்தவரை சாதாரண கட்டண விவரங்கள் கிடைக்கின்றன. ஆனால் சலுகைக் கட்டண விவரங்கள் காட்டப்படுவதில்லை.

இவ்வளவு இருந்தும் மெட்ரோவின் சுரங்க ரயில் நிலையங்களில் செல்லிடப்பேசி சிக்னல் கிடைப்பதில்லை. முதலில் மெட்ரோ ரயில் நிர்வாகம், அதற்கொரு தீர்வு காண வேண்டும். ஆனால், இந்த செயலி மெட்ரோவில் பயணிப்பவர்களுக்கு நிஜமான வழிகாட்டியாக இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை என்றார்.